tnkalvi.online

No. of Printed Pages : **11**

63365

8275

பதிவு எண்
Register Number

அறிவியல் / SCIENCE

(தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version)

கால அளவு : **2.00** மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : **100**

Time Allowed : **2.00** Hours] [Maximum Marks : **100**

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

Instructions : (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

பகுதி - I / PART - I

பிரிவு - 1 / SECTION - 1

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **15x1=15**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

Note : (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code along with the corresponding answer.

1. வெப்பநிலையின் SI அலகு _____.

(அ) செல்சியஸ் (ஆ) ஃபாரன்ஹீட் (இ) கெல்வின் (ஈ) ஆம்பியர்

SI unit of temperature is _____.

(a) Celsius (b) Fahrenheit (c) Kelvin (d) Ampere

[திருப்புக / Turn over

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-8-science-eslc-august-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

2. பாகுநிலையின் அலகு _____.

(அ) Nm^2 (ஆ) பாய்ஸ் (இ) $Kgms^{-1}$ (ஈ) ஹெர்ட்ஸ்

The unit of viscosity is _____

(a) Nm^2 (b) Poise (c) $Kgms^{-1}$ (d) Hertz

3. வாகனங்களில் பின் காட்சி ஆடியாகப் பயன்படுத்தப்படும் ஆடி _____.

(அ) குழி ஆடி (ஆ) குவி ஆடி

(இ) சமதள ஆடி (ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

The spherical mirror used as a rear view mirror in the vehicle is _____

(a) Concave mirror (b) Convex mirror

(c) Plane mirror (d) None of the above

4. இரண்டு பொருள்களைத் தேய்க்கும் போது எவை இடமாற்றம் அடைவதால் மின்னேற்றம் ஏற்படுகிறது ?

(அ) நியூட்ரான்கள் (ஆ) புரோட்டான்கள்

(இ) எலக்ட்ரான்கள் (ஈ) புரோட்டான்களும் நியூட்ரான்களும்

The electrification of two different bodies on rubbing is because of the transfer of _____

(a) neutrons (b) protons

(c) electrons (d) protons and neutrons

5. ராக்கெட்டில் பயன்படும் தத்துவம் _____.

(அ) நியூட்டனின் முதல் விதி (ஆ) நியூட்டனின் இரண்டாம் விதி

(இ) நியூட்டனின் மூன்றாம் விதி (ஈ) இவை அனைத்தும்

The working principle of Rocket is _____

(a) Newton's First Law (b) Newton's Second Law

(c) Newton's Third Law (d) All the above

6. பாதரசத்தின் குறியீடு _____

(அ) Ag (ஆ) Hg (இ) Au (ஈ) Pb

Symbol of Mercury is _____

(a) Ag (b) Hg (c) Au (d) Pb

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-8-science-eslc-august-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

7. காகிதம் எரிதல் என்பது ஒரு _____ மாற்றம்.

(அ) இயற்பியல்

(ஆ) வேதியியல்

(இ) இயற்பியல் மற்றும் வேதியியல்

(ஈ) நடுநிலையான

Burning of paper is a _____ change.

(a) physical

(b) chemical

(c) physical and chemical

(d) neutral

8. பின்வருவனவற்றுள் அசோட் எனப்படுவது எது ?

(அ) ஆக்சிஜன் (ஆ) நைட்ரஜன்

(இ) சல்பர் (ஈ) கார்பன்-டை-ஆக்ஸைடு

Which of the following is known as azote ?

(a) Oxygen (b) Nitrogen

(c) Sulphur (d) Carbon di-oxide

9. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் எது நீரை மாசுபடுத்தும் ?

(அ) ஈயம் (ஆ) படிகாரம் (இ) ஆக்ஸிஜன் (ஈ) குளோரின்

Which of the following is a water pollutant ?

(a) Lead (b) Alum (c) Oxygen (d) Chlorine

10. வாயுக்கசிவை அறிவதற்காக LPG வாயுவுடன் சேர்க்கப்படும் வேதிப்பொருள் _____.

(அ) மெத்தனால் (ஆ) எத்தனால் (இ) கற்பூரம் (ஈ) மெர்காப்டன்

The chemical mixed with LPG that helps in the detection of its leakage is _____

(a) Methanol (b) Ethanol (c) Camphor (d) Mercapton

[திருப்புக / Turn over

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-8-science-eslc-august-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

11. தூதுவளையின் இருசொற்பெயர் 'சொலானம் ட்ரைலொபேட்டம்' ஆகும். இதில் ''சொலானம்'' என்ற சொல் எதைக் குறிக்கிறது ?

(அ) சிற்றினம் (ஆ) பேரினம் (இ) வகுப்பு (ஈ) வரிசை

'Solanum trilobatum' is the binomial name of Thoothuvalai. The word 'Solanum' refers to

(a) Species (b) Genus (c) Class (d) Order

12. காற்றில்லா அல்லது ஆக்ஸிஜனற்ற சூழலில் குளுக்கோஸ் சிதைவடைந்து _____ -ஐக் கொடுக்கும்.

(அ) லாக்டிக் அமிலம் (ஆ) சிட்ரிக் அமிலம்

(இ) அசிட்டிக் அமிலம் (ஈ) நைட்ரிக் அமிலம்

In the absence of oxygen, glucose is broken down into :

(a) Lactic acid (b) Citric acid

(c) Acetic acid (d) Nitric acid

13. ஆடம்ஸ் ஆப்பிள் என்பது _____ வளர்ச்சியைக் குறிக்கிறது.

(அ) தொண்டைக்குழி (ஆ) தைராய்டு

(இ) குரல்வளை (ஈ) பாராதைராய்டு

Adam's apple is the growth of the _____

(a) Pharynx (b) Thyroid

(c) Larynx (d) Parathyroid

14. சிவப்பு தரவு புத்தகம் _____ பற்றிய பட்டியலை வழங்குகிறது.

(அ) உள்ளூர் இனங்கள் (ஆ) அழிந்து போன இனங்கள்

(இ) இயற்கை இனங்கள் (ஈ) இவை எதுவுமில்லை

The Red Data Book gives a list of _____

(a) Endemic species (b) Extinct species

(c) Natural species (d) None of these

15. எல்லா சார்புகளும் _____ என்ற குறியீட்டைக் கொண்டு துவங்கும்.

(அ) < (ஆ) = (இ) > (ஈ) }

All functions begin with an _____ sign.

(a) < (b) = (c) > (d) }

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-8-science-eslc-august-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

பிரிவு - 2 / SECTION - 2

கோடிட்ட இடங்களை நிரப்புக. **10x1=10**
Fill in the blanks.

16. மின்னோட்டத்தினை அளவிடப் பயன்படும் கருவி _____ ஆகும்.
_____ is used to measure electric current.

17. ஆழம் அதிகரிக்கும்போது திரவ அழுத்தம் _____.
The pressure of a liquid column _____ with the depth of the column.

18. _____ என்பது புரதங்கள், கார்போஹைட்ரேட்டுகள், கொழுப்பு மற்றும் உயிர்ச்சத்துக்களை குறிப்பிட்ட அளவில் உள்ளடக்கியதாகும்.
_____ includes protein, carbohydrates, fats and vitamins in requisite proportion.

19. சூரியன் _____ விண்மீன் திரளைச் சார்ந்தது.
Sun belongs to _____ galaxy.

20. பிரைன் கரைசலின் மின்னாற்பகுத்தல் _____ வாயுக்களைத் தருகிறது.
Electrolysis of brine solution gives _____ gases.

21. _____ என்பது ஒரு தனிமத்தின் மிகச்சிறிய துகள்.
_____ is the smallest particle of an element.

22. பெட்ரோலியம் என்ற சொல் குறிப்பது _____.
The term petroleum means _____.

23. இருசொற்பெயரிடு முறை முதன்முதலில் _____ என்பவரால் அறிமுகப்படுத்தப்-பட்டது.
Binomial nomenclature was first introduced by _____.

24. உயிரினங்கள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகர்வது _____ எனப்படும்.
Movement of organisms from one place to another place is called _____.

25. _____ நாள் 'உலக வனவிலங்கு தினமாக' அனுசரிக்கப்படுகிறது.
_____ is observed as 'World Wildlife Day'.

[திருப்புக / Turn over

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-8-science-eslc-august-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

பிரிவு – 3 / SECTION - 3

பொருத்துக. **10x1=10**

Match the following.

26.	கார்போஹைட்ரேட்	-	குஜராத்
	Carbohydrate	-	Gujarat
27.	ஆண்ட்ரோஜன்	-	பேசில்லஸ் துரின்ஜியென்சிஸ்
	Androgen	-	Bacillus thuringiensis
28.	கிர் தேசியப் பூங்கா	-	நீர்
	Gir National Park	-	Water
29.	உயிரி பூச்சிக்கொல்லிகள்	-	குளுக்கோஸ்
	Bio - pesticide	-	Glucose
30.	குளோரோஃபைசி	-	தசை உருவாக்கம்
	Chlorophyceae	-	Muscle development
31.	லிக்னைட்	-	ரேடியோ தொலைநோக்கிகள்
	Lignite	-	Radio telescopes
32.	பினாப்தலின்	-	ஜோசப் ப்ரௌஸ்ட்
	Phenolphthalein	-	Joseph Proust
33.	சர்வ கரைப்பான்	-	பழுப்பு நிறம் கொண்டது
	Universal solvent	-	Brown in colour
34.	மாறா விகித விதி	-	நிறங்காட்டி
	Law of constant proportions	-	Indicator
35.	பரவளைய ஆடி	-	பச்சைப்பாசி
	Parabolic mirrors	-	Green algae

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-8-science-eslc-august-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

பிரிவு - 4 / SECTION - 4

குறிப்பு : **ஓரிரு** வார்த்தைகளில் விடையளிக்கவும். **5x1=5**

Note : Answer the following questions in **one** or **two** words.

36. வெப்பநிலையை அளக்க உதவும் கருவியின் பெயரினைத் தருக.
Give the name of the instrument used for the measurement of temperature.

37. ஏன் ஆலய மணிகள் உலோகங்களால் செய்யப்படுகின்றன ?
Why are bells made of metals ?

38. நைட்ரஜனை நிலைப்படுத்தும் ஏதேனும் ஒரு பாக்டீரியாவின் பெயரை எழுதுக.
Write the name of any nitrogen fixing bacteria.

39. இருவிதையிலைத் தாவரங்களின் ஏதேனும் இரு பண்புகளை எழுதுக.
Write any two characters of dicotyledons.

40. 'வளர்சிதை மாற்றம்' – வரையறுக்கவும்.
Define - 'Metabolism'.

பகுதி - II / PART - II

குறிப்பு : **ஏதேனும் பத்து** வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும். **10x2=20**

Note : Answer **any ten** of the following questions.

41. அளவீடு என்றால் என்ன ?
What is measurement ?

42. வெப்பக் கடத்தல் என்றால் என்ன ?
What is conduction ?

43. மின்சுற்று என்றால் என்ன ?
What is electric circuit ?

[திருப்புக / Turn over

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-8-science-eslc-august-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

44. ஒலி மாசுபாட்டின் விளைவுகள் யாவை ?
What are the hazards of noise pollution ?

45. சந்திரயான்-1 திட்டத்தின் நோக்கங்கள் யாவை ?
What are the objectives of Chandrayaan-1 ?

46. இரசவாதம் – வரையறுக்கவும்.
Define - Alchemy.

47. உலக வெப்பமயமாதல் என்றால் என்ன ?
What is global warming ?

48. 'பொருண்மை அழியா விதி' – வரையறுக்கவும்.
Define the 'Law of Conservation of Mass'.

49. நடுநிலையாக்கல் வினை என்றால் என்ன ?
What is a neutralisation reaction ?

50. ஏன் ஆந்த்ரசைட் வகை நிலக்கரி மிகவும் உயர்தரமான நிலக்கரி எனப்படுகிறது ? அதற்கான காரணம் தருக.
Why anthracite is known as the highest grade coal ? Give reason.

51. வடிவத்தின் அடிப்படையில் நான்கு வகையான பாக்டீரியாக்களின் பெயர்களை எழுதுக.
Write the four types of bacteria, based on their shape.

52. பாசிகளின் ஏதேனும் மூன்று பொருளாதார முக்கியத்துவங்களை எழுதுக.
Write any three economic importance of Algae.

53. காற்றுள்ள சுவாசம் மற்றும் காற்றில்லா சுவாசத்திற்கு இடையே உள்ள வேறுபாடுகளை அட்டவணைப்படுத்துக.
Tabulate the differences between aerobic and anaerobic respiration.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-8-science-eslc-august-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

54. வளரிளம் பருவம் என்றால் என்ன ?

What is adolescence ?

55. சிவப்பு தரவு புத்தகத்தின் நன்மைகளை எழுதுக.

Write the advantages of Red Data Book.

பகுதி - III / PART - III

பிரிவு - 1 / SECTION - 1

குறிப்பு : பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். **2x5=10**

Note : Answer the following.

56. பாக்டீரியா செல்லின் படம் வரைந்து பாகங்களைக் குறிக்கவும்.

Draw a neat labelled diagram of the Bacterial cell.

57. கிளாமிடோமோனாஸின் அமைப்பினை படம் வரைந்து பாகங்களைக் குறிக்கவும்.

Draw the structure of Chlamydomonas and label its parts.

பிரிவு - 2 / SECTION - 2

குறிப்பு : கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும். **6x5=30**

Note : Answer the following questions.

58. (அ) கடிகாரங்களின் வகைகளைப் பற்றி சிறு குறிப்பு வரைக.

அல்லது

(ஆ) ஒளி எதிரொளித்தல் என்றால் என்ன ? ஒழுங்கான மற்றும் ஒழுங்கற்ற எதிரொளிப்புக்களைப் பற்றி சிறு குறிப்பு வரைக.

(a) Write a short note on different types of clocks.

OR

(b) What is reflection ? Write a short note on regular and irregular reflection.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-8-science-eslc-august-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

59. (அ) தொடர் மற்றும் பக்க இணைப்புச் சுற்றை விளக்குக.

அல்லது

(ஆ) காந்தத்தின் அன்றாட வாழ்வியல் பயன்களைப் பட்டியலிடுக.

(a) Explain the Series and Parallel circuit.

OR

(b) List out the uses of magnets in daily life.

60. (அ) உலோகங்களுக்கும் அலோகங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை அட்டவணைப்படுத்துக.

அல்லது

(ஆ) கீழ்கண்ட சேர்மங்கள் ஆக்சிஜனுடன் எரியும் போது உருவாகும் பொருட்களை எழுதுக.

(i) கார்பன்

(ii) சல்பர்

(iii) பாஸ்பரஸ்

(iv) மெக்னீசியம்

(v) இரும்பு

(vi) சோடியம்

(a) Tabulate the differences between metals and non-metals.

OR

(b) Name the substances produced when the following compounds burn in oxygen.

(i) Carbon

(ii) Sulphur

(iii) Phosphorus

(iv) Magnesium

(v) Iron

(vi) Sodium

61. (அ) அமிலங்களின் பயன்கள் யாவை ?

அல்லது

(ஆ) பல்வேறு எரிபொருள் வாயுக்களைப் பற்றி எழுதுக.

(a) What are the uses of acids ?

OR

(b) Write about the different types of fuel gases.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-8-science-eslc-august-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

62. (அ) நுண்ணுயிரிகளால் மனிதர்களுக்கு ஏற்படும் பொதுவான நோய்கள் பற்றி எழுதுக.

அல்லது

(ஆ) மனிதக் கண்ணின் உள்ளமைப்பின் படம் வரைந்து அதன் பாகங்களைக் குறிக்கவும்.

(a) Write about the common human diseases caused by micro-organism.

OR

(b) Draw the structure of Human eye and label its parts.

63. (அ) மூட்டுகளின் வகைகளைக் கூறி, ஒவ்வொரு வகைக்கும் ஒரு எடுத்துக்காட்டு தருக.

அல்லது

(ஆ) வளரிளம் பருவத்தினரின் ஊட்டச்சத்து தேவைகள் பற்றி சுருக்கமாக விளக்குக.

(a) Name the different types of Joints. Give one example for each type.

OR

(b) Explain briefly about the nutritional needs of adolescence.

- o 0 o -

tnkalvi.online

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-8-science-eslc-august-2024 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share